**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், புதுக்கோட்டை**

**அ.வ.எண்.220/2023**

வாதி தரப்பு 2வது சாட்சி ரெத்தினகுமார் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மெ. ரெத்தினகுமார் | வயது | : | 60/2025 |
| தகப்பனார் பெயர் | : | மெய்யப்பன் | தாலுகா | : | அறந்தாங்கி |
| கிராமம் | : | மேல்மங்களம் | தொழில் | : | பத்திர எழுத்தர் |

நாள்-09.07.2025

வா.சா.2

சாட்சி இன்று திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) நான் சுமார் 30 வருடங்களாக பத்திர எழுத்தராக வேலை செய்து வருகிறேன். மேற்படி பத்திரம் எழுதுவதற்கு வாதிதான் என்னை அணுகினாரா என்று கேட்டால், வாதி, பிரதிவாதி இருவரும்தான் என்னை அணுகினார்கள்.

2) பத்திரம் தயார் செய்வதற்கு முன்பு நான் அந்த இடத்தை சென்று பார்க்கவில்லை.

3) தாய் பத்திரத்தை நான் பார்த்ததாக வா.சா.ஆ.1-ல் சொல்லப்படவில்லை என்றால் பாகப்பிரிவினை பத்திரம் உள்ளீட்ட பத்திரங்கள் பற்றி வா.சா.ஆ.1-ல் சொல்லப்பட்டுள்ளது. எனவே, அவற்றை நான் பார்த்தேன்.

4) தாய் பத்திரங்களை வாதியிடம் பிரதிவாதி ஒப்படைத்ததாக வா.சா.ஆ.1-ல் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை-இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.